பாடம் 05

கிறிஸ்து நாதரைச் சந்திப்போம்

படத்தைச் சற்று உற்று நோக்குங்கள் இயேசு சக்கேயுவைச் சந்திக்கும் சந்தர்ப்பம்.

யார் இந்தச் சக்கேயு?

இயேசு வாழ்ந்த காலத்தில் வாழ்ந்த இறைவரி சேகரிக்கும் தொழிலாளி ஒருவர். அவர் ஏழைகளிடம் பிழையான முறையில் வரி சேகரித்தார். பிழையான வழிகளில் காசு சேகரித்துப் பணக்காரனானான். ஆனபடியால் மக்கள் சக்கேயுவை வெறுத்தனர். ஆயினும் இயேசு சக்கேயுவை அன்பு செய்தார்.

ஒரு நாள் இயேசு சக்கேயுவைச் சந்தித்தார். சக்கேயு இன்று நான் உன்னுடைய வீட்டில் உணவருந்த வேண்டும் என்றார். சக்கேயுவுக்கு மகிழ்ச்சி தாங்கவில்லை. அவர் தாம் செய்த பிழைகளை எண்ணி மனம் வருந்தினார். இனிமேல் இவ்வாறான பிழைகளைச் செய்வதில்லை என்று வாக்களித்தார். இயேசு சக்கேயுவின் மனமாற்றத்தைக் கண்டு மிகவும் மகிழ்ச்சி அடைந்தார். சக்கேயு அன்று தொடக்கம் ஒரு நல்ல கிறிஸ்தவனாக வாழுவதற்கு முடிவு செய்தான்.

இங்கே பாருங்கள். இன்னொருவர் இயேசுவைச் சந்திக்கிறார். அவர் யார்? ஒரு பெண். பாதையில் இயேசு போய்க் கொண்டிருக்கிறார். வாசியுங்கள்.

பெரும் சனக்கூட்டத்திற்கு மத்தியில் இயேசு பயணம் செய்து கொண்டிருந்தார். நீண்ட காலமாக நோய்வாய்ப்பட்டிருந்த ஒரு பெண் அவர்கள் இடையே இருந்தாள். அவள் இயேசுவை நெருங்க முயற்சித்துக் கொண்டிருந்தாள்.

ஆயினும் சனக்கூட்டம் அதிகமாக இருந்த படியால் அவரை நெருங்க முடியாமலிருந்தது. ஆயினும் மிகவும் சிரமப்பட்டு இயேசுவை நெருங்கி அவருடைய ஆடையைத் தொட்டாள். என்ன ஆச்சரியம் உடனே அவள் குணமடைந்தாள். அப்போது இயேசு என்னுடைய ஆடையைத் தொட்டது யார் என்று கேட்டார்.

இயேசுவின் சீடர்கள் சிரித்துக் கொண்டு ஆண்டவரே, இவ்வளவு சனக்கூட்டம் உம்மை நெருங்கி வரும் போது எத்தனையோ பேர்கள் உம்மைத் தொட்டிருப்பார்கள் என்றனர்.

அப்போது இயேசுவின் ஆடையைத் தொட்டதினால் குணமடைந்த பெண் நடுங்கியவாறு அவர் முன் வந்து நடந்ததைக் கூறினாள். மன்னிப்புக் கேட்டாள்.

இயேசு, அவளை அன்புடன் அழைத்து **"மகளே உன் விசுவாசம் உன்னைக் குணமாக்கியது. சமாதானமாகப் போ"** என்றார். இவ்வாறு அந்நாளில் இயேசு சந்தித்த அநேகர் இருக்கிறார்கள். இயேசு அவர்கள் அனைவரையும் மிகவும் அன்பு செய்தார். அதே போல் இன்று இயேசு நம் எல்லோரையும் அன்பு செய்கிறார்.

ஆம், பிள்ளைகளே! நீங்களும் இயேசுவைச் சந்திக்க விரும்பு கிறீர்களா? நீங்கள் திருமுழுக்குப் பெற்றபோது இயேசு உங்களிடம் வந்தார். அப்போது நீங்கள் குழந்தைகளாக இருந்தபடியால் உங்களுக்குத் தெரியாது. ஆனால் இப்போதும் நீங்கள் இயேசுவைச் சந்திக்கச் சந்தர்ப்பம் உண்டு. வழிகள் உண்டு.

அவற்றை நாங்கள் திருவருட்சாதனங்கள் என்று சொல்லு கிறோம். இதோ அந்தத் திருவருட்சாதனங்கள்.

1. திருமுழுக்கு 2. ஒப்புரவுத் திருவருட்சாதனம்
3. தேவநற்கருணை 4. உறுதிப்பூசுதல் 5. நோயிற் பூசுதல். 6. குருத்துவம் 7. மெய்விவாகம்

இவற்றுள் சில திருவருட்சாதனங்களை நீங்கள் உங்கள் பாடசாலைக் காலத்துள் பெற்றுக் கொள்ள முடியும்.

சில திருவருட் சாதனங்கள் அடிக்கடி பெற்றுக் கொள்ள முடியும். சில திருவருட்சாதனங்களை ஒரு முறை மாத்திரமே பெற்றுக் கொள்ள முடியும். இந்தத் திருவருட்சாதனங்கள் யாவும் எமக்கு இயேசுவின் அன்புக் கொடைகள். இவற்றைப் பற்றிய மேலதிக விளக்கத்தை நீங்கள் பின்னர் கற்று அறிந்து கொள்ளலாம்.

ஒப்படை

1. சக்கேயுவை அன்பு செய்தது யார்?
2. ஆடையைத் தொட்ட பெண்ணுக்கு இயேசு என்ன சொன்னார்?
3. இயேசுவைச் சந்தித்தவர்கள் என்ன செய்ய விரும்பினார்கள்?
4. 1. இயேசுவைச் சந்திக்க உங்களுக்கு எத்தனை சந்தர்ப்பங்கள் உள்ளன?
   2. அந்தச் சந்தர்ப்பங்கள் என்ன பெயரால் அழைக்கப் படுகின்றன.
5. நீங்கள் அறிந்த நான்கு திருவருட் சாதனங்களின் பெயர்களைத் தருக.